

வேலூர் மாவட்டம் கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவமாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (03.08.2023) லத்தேரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், கீ.வ.குப்பம் ஒன்றிய குழு தலைவர் ரவிச்சந்திரன், ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி.ஜெயா முருகேசன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அந்தமானில் நிலநடுக்கம்

போர்ட் பிளேர், ஆக.4-

அந்தமானில் நேற்று அதிகாலை மிதமான நில நடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 4.3 ஆக பதிவானது.

அந்தமான் நிகோபார் தீவுகளில் நேற்று அதிகாலை மிதமான நில நடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் 4.3 ஆக இந்த நில நடுக்கம் பதிவானது.

அதி காலை 4.17 மணிக்கு ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அங்குள்ள கட்டிடங்கள் லேசாக குலுங்கின. நில நடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக எந்த தகவலும் இல்லை.

### வெற்றிகள் நிறைந்த ஆண்டாக விளங்கட்டும்!

# கர்நாடக முதல்வர் சித்தராமையா பிறந்த நாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



சென்னை, ஆக. 4-

கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துகள். இந்நாள் மகிழ்ச்சி நிறைந்த நாளாகவும், எதிர்வரும் ஆண்டு நல்ல உடல் நலன், மகிழ்ச்சி மற்றும் வெற்றிகள் நிறைந்த ஆண்டாகவும் விளங்கிட எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### 16 ஆண்டுகளுக்குப் பின்

# சென்னையில் பன்னாட்டு ஹாக்கிப் போட்டிகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக.4-

16 ஆண்டுகளுக்குப் பின் சென்னையில் பன்னாட்டு ஹாக்கிப் போட்டிகள் தொடங்கியுள்ளது. அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்து ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை தொடங்கியதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**16 ஆண்டுகளுக்குப் பின் பன்னாட்டு ஹாக்கி போட்டிகள் சென்னைக்குத் திரும்புகின்றன. உலகத் தரத்திலான செயற்கை இழை மைதானத்தில் இன்று ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை 2023 தொடங்குகிறது.**

**தமிழ்நாட்டின் விளையாட்டு ஆர்வலர்கள், மாணவர்கள், இளைஞர்கள் அனைவரும் பெருமளவில் திரண்டு வந்து சிறந்த ஹாக்கி ஆட்டங்களைக் காண அழைக்கிறேன். ஆசியாவின் மிகப்பெரும் ஹாக்கி தொடரின் பெரிய, பெருமைமிகு ஆதரவாளர்களாகச் சென்னையைத் திகழச் செய்வோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

# மழைநீர் வடிகால் பணிகள் : முதல்வர் ஆய்வு!

முதல் பக்கத் தொடர்ச்சி

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதில் போரூர் ஏரியில் நடைபெற்று வரும் புதிய மதகு அமைத்தல் மற்றும் போரூர் ஏரி முதல் இராமாபுரம் ஓடைவரை புதியதாகமூடியவடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பருவமழை தொடங்குவதற்கு முன் இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்படும்.

**அசோக் நகர் 4வது நிழற்சாலை பகுதி!**

**அசோக் நகர் 4வது நிழற்சாலை மற்றும் அதனை சார்ந்த பகுதிகளில் ரூ.7.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு**

கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட அசோக் நகர் 4வது நிழற்சாலை மற்றும் அதனை சுற்றியுள்ள சாலைகளில் கடந்த 2021ஆம் மற்றும் 2022ஆம் ஆண்டு பருவ மழையின் காரணமாக சாலையில் 2 அடி உயரத்திற்கு 10 நாட்களாக மழைநீர் தேங்கியது. அசோக் நகர் 4வது நிழற்சாலையின் மழை நீரானது பழைய கால்வாயின் மூலம் போஸ்டல் காலனி வழியாக சுமார் 2.5 கி.மீ தொலைவு கடந்து ரெட்டிக்குப்பம் கால்வாய் வழியாக அடையாறு ஆற்றினை அடைந்தது. இதனால் மேற்கு மாம்பலம் பகுதியும் அதிகம் பாதிக்கப்பட்டது.

மேற்கண்ட மழைநீர் தேக்கத்தினை அகற்ற நிரந்தர தீர்வாக ஜாபர் கான்பேட்டை கால்வாய் வழியாக அடையாறு ஆற்றினை குறைந்த தொலைவில் சென்றடையும்படி மாற்றியமைக்கப்பட்டு தொழில்நுட்ப ஆலோசகரின் வடிவமைப்பின்படி 1.313 கி.மீ நீளத்திற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், 7 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அசோக் நகர் 4வது நிழற்சாலை மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் கட்டும் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த மழைநீர் வடிகால் அமைப்பின் மூலம் தேங்கும் மழைநீர் ஜாபர் கான்பேட்டை கால்வாய் மூலம் அடையாறு ஆற்றினை விரைவாக சென்று சேரும். இதன்மூலம், அசோக் நகர் 4வது நிழற்சாலை, 6வது நிழற்சாலை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மழைவெள்ளம் தேங்குவது முற்றிலும் தவிர்க்கப்படும்.

இந்த ஆய்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி. எஸ். சமீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மொத்தம் 6 பேர் உயிரிழந்துள்ள நிலையில்

# ஹரியானாவில் தொடரும் விஸ்வ ஹிந்து பரிஷத் கலவரம்!

### டெல்லிக்கும் பரவலாம் என அச்சம்!

புதுதில்லி, ஆக. 4-

ஹரியானா மாநிலத்தில், விஸ்வ ஹிந்து பரிஷத் கும்பல் தூண்டிவிட்ட மதக் கலவரம் புதன்கிழமையன்றும் தொடர்ந்தது. இது தலைநகர் தில்லிக்கும் பரவலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. வி.எச்.பி.யின் மத வன்முறைக்கு, ஏற்கெனவே 5 பேர் உயிரிழந்துவிட்ட நிலையில், புதனன்று மேலும் ஒருவர் பலியானார். இதுவரை நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 2 போலீசார், பொதுமக்கள் 4 பேர் என மொத்தம் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். நூஹ் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை போலீசார் கொடி அணிவகுப்பு நடத்தினர். அத்துடன் நூஹ், குர்கான், பல்வால், பரிதாபாத் ஆகிய பகுதிகளில் 144 தடை உத்தரவும் பிறப்பித்தனர். எனினும், வி.எச்.பி. நடத்தும் வன்முறை தடுத்து நிறுத்தப்படவில்லை.

செக்டார் 57இல் உள்ள அஞ்சுமான் ஜமா மசூதி செவ்வாய்க்கிழமை அதிகாலை தீ வைக்கப்பட்டதுடன், அந்த மசூதியில் இமாமாக பணியாற்றி வந்த 19 வயதேயான ஹபீஸ் சாத் கொல்லப் பட்டார். இதே போல செவ்வாயன்று இரவும் வன்முறைகள் தொடர்ந்தன. குர்கான் செக்டார் 66இல், 7 கடைகள் தீவைத்து எரிக்கப்பட்டன. 14 கடைகள் சூறையாடப்பட்டன. குர்கானிலுள்ள பாட்ஷாபூரில் உணவகத்திற்கு தீ வைத்த மத வெறிக் கும்பல், தொடர்ந்து அருகில் உள்ள கடைகளையும் அடித்து நொறுக்கி சேதப்படுத்தியது. கலவரத்தில் 120 வாகனங்கள் சேதப்படுத்தப் பட்டுள்ளன. அவற்றில் 8 காவல்துறை வாகனங்கள் உள்பட 50 வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளன. குர்கான் அருகிலுள்ள சோனாவிற்கும் வன்முறை பரவியுள்ளது. அங்கு முஸ்லிம் சமூகத்தினருக்குச் சொந்தமான 4 வாகனங்கள், ஒரு கடை தீவைத்து எரிக்கப்பட்டது. மேலும் அங்கிருந்த மசூதி ஒன்றுக்கும் தீவைக்கப்பட்டது. இந்த வன்முறையில் ஈடுபட்ட மத வெறிக் கும்பல் மசூதிக்கு முன்பு “ஜெய் ஸ்ரீராம்” என்றும் முழக்கமிட்டனர். வன்முறையைத் தொடர்ந்து பாட்ஷாபூர் சந்தை மூடப்பட்டது.

இந்த வன்முறையைத் தொடர்ந்து அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் பாது காப்பு பலப்படுத்தப் பட்டு உள்ளது. ஏற்கெனவே 13 கம்பெனி துணை ராணுவப் படையினர் வரவழைக்கப்பட்ட நிலையில், மேலும் 6 கம்பெனி வீரர்கள் பாதுகாப்பு பணிக்காக வரவுள்ளதாக அரசு கூறியுள்ளது. இதுவரை 41 வழக்குகளைப் பதிவுசெய்துள்ள போலீசார், 116 பேரை கைது செய்து உள்ளனர். கலவரம் நடத்தியது மட்டுமல்லாமல், நூஹ் பகுதியில் நடந்த வன்முறையைக் கண்டிக்கிறோம் என்ற பெயரில் தலைநகர் தில்லியில் உள்ள மெட்ரோ ரயில் நிலையம் அருகே வி.எச்.பி. மற்றும் பஜ்ரங் தளம் அமைப்புகள் போராட்டத்துக்கும் அழைப்பு விடுத்தன. மேவாட் பகுதியில் நடந்த வன்முறையைக் கண்டித்து, விஸ்வ ஹிந்து பரிஷத் மட்டுமல்லாது, பஜ்ரங் தள் உள்ளிட்ட அமைப்புகளும் மானேசர் பகுதியில் உள்ள பீசம் மந்திரில் மகா பஞ்சாயத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன. இதனால், தலைநகர் தில்லிக்கும் வன்முறை பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நூஹ் வன்முறையில் உயிரிழந்த ஊர்க்காவல் படைவீரர்களுக்கு ரூ. 57 லட்சம் நிவாரணமாக அறிவிக்கப்பட்டு உள்ளது. பெட்ரோல் பங்குகளில் வாகனங்களைத் தவிர, பாட்டில்கள், கேன்களில் கேட்டால் பெட்ரோல், டீசல் விற்பனை செய்யக்கூடாது என்று குர்கான் மாவட்ட ஆட்சியர் தடை விதித்துள்ளார்.

**பேரணிக்கு ஆயுதங்களோடு வந்த வி.எச்.பி. கும்பல்!**

ஹரியானாவின் நூஹ் பகுதியில் பிரிஜ்மண்டல் ஜலாபிஷேக் யாத்திரைக்கு வி.எச்.பி. அனுமதி பெற்ற போது, தங்களின் அணிவகுப்பில் ஆயுதங்கள் இடம் பெறாது என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டு உள்ளது. ஆனால், அதனை மீறி ஆயுதங்களைக் கொண்டு வந்துள்ளனர். ஊர்வலத்திற்கு முன்னதாக ஜுலை 27 அன்று, நூஹ் காவல்துறை மற்றும் மாவட்ட அதிகாரிகள், விஸ்வ ஹிந்து பரிஷத், பஜ்ரங் தள் மற்றும் ஜம்மியத் உலமாஇஹிந்த் பிரதிநிதிகள் மற்றும் அப்பகுதி மக்கள் பங்கேற்ற கூட்டம் நடந்துள்ளது. அப்போது ஆயுதங்களைத் தவிர்க்க வேண்டும் என்று தாங்கள் கூறியதை காவல்துறை துணை ஆணையர் பிரசாந்த் பன்வார் தற்போது சுட்டிக் காட்டுகிறார்.

கடந்த மூன்று ஆண்டுகளாகவே, ஊர்வலத்திற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை; ஆயுதங்கள் பயன்படுத்துவதைத்தான் எதிர்க்கிறோம் என்று ஜம்மியத் உலமாஇஹிந்த் உறுப்பினர் மவுலானா யஹியா கரீமியும் அந்த கூட்டத்தி லேயே கூறியுள்ளார். ஆனால், இவை அனைத்தையும் மீறி, வி.எச்.பி. கூட்டத்தினர் ஆயுதங்களைக் கொண்டு வந்துள்ளனர். அதேபோல பிவானியில் ஜுனைத் மற்றும் நசீர் கொலையில் குற்றம்சாட்டப் பட்ட மோனு மானேசர் எனப்படும் மோகித் யாதவ், ஜுலை 29 அன்று தனது வாட்ஸ்அப் ஸ்டேட்டஸாக வெளி யிட்ட வீடியோவில், “நான் நேரில் யாத்திரையில் கலந்து கொள்வேன், எனது முழு குழுவும் கலந்துகொள்ளும்” என்று கூறி, ஆத்திரத்தைத் தூண்டியுள்ளார்.

**துணைமுதல்வர் குற்றச்சாட்டு!**

ஹரியானா மதக் கலவரம் தொடர்பாக ஹரியானா துணை முதல்வர் துஷ்யந்த் சவுதாலா பேட்டி ஒன்றை அளித்துள்ளார். அதில், விஸ்வ ஹிந்து பரிஷத் நடத்திய இந்த பிரிஜ் மண்டல் ஜலா பிஷேக் யாத்ரா பற்றிய முழுமையான தகவல்களை மாவட்ட நிர்வாகத்திற்கு அவர்கள் தரவில்லை. யார்? யார்? பங்கேற்கின்றனர் என்ற தகவல்களும் அவர்கள் தரவில்லை. இதன் காரணமாக, நூஹ் மாவட்டத்தில் வன்முறை வெடித்தது. கடந்த காலத்தில் இது போன்ற சம்பவம் எதுவும் மாநிலத்தில் நடக்கவில்லை. சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்று தெரிவித்துள்ளார்.

**உச்சநீதிமன்றம் உத்தரவு!**

விஸ்வ ஹிந்து பரிஷத், பஜ்ரங் தள் ஆகிய அமைப்புக்கள் நடத்தும் பேரணிகளால் வன்முறைகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என்று உ.பி, ஹரியானா, தில்லி மற்றும் ஒன்றிய அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஹரியானாவில் மதவெறி வன்முறைகளை அரங்கேற்றிய விஸ்வ ஹிந்து பரிஷத், அடுத்ததாக தலைநகர் தில்லி மற்றும் புறநகரான நொய்டாவிலும் பேரணி என்ற பெயரில் வன்முறை வேலைகளை ஆரம்பித்தன. குறிப்பாக, தில்லியில் புதனன்று காலையிலேயே பஜ்ரங் தள் போராட்டத்தில் இறங்கியது. இதையடுத்து, விஎச்பி மற்றும் பஜ்ரங் தள்ளின் பேரணிகளுக்கு தடை விதிக்கக் கோரி, உச்சநீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இம்மனுவை விசாரித்த உச்ச நீதி மன்ற நீதிபதிகள், தில்லி உள்ளிட்ட இடங்களில் நடத்தப்படும் பேரணிகளில் வன்முறை மற்றும் வெறுப்பை தூண்டும் பேச்சுகளை போலீசார் அனுமதிக்கக் கூடாது. வன்முறைகள் நிகழாமல் தடுக்க உ.பி, ஹரியானா, தில்லி மற்றும் ஒன்றிய அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

### எந்நாளும் பொதுமக்களின் நண்பனாக

# தமிழ்நாடு காவல்துறை பணியாற்ற வேண்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டரில் வேண்டுகோள்!

சென்னை, ஆக.4-

தமிழ்நாடு காவல்துறை எந்நாளும் பொதுமக்களின் நண்பன் எனச் சொல்லும் வகையில் பணியாற்றி அரசுக்கு நற்பெயர் பெற்றுத்தர வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

பழவந்தாங்கல் காவல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, நம் மாநிலம் அமைதிப்பூங்காவாகத் திகழ இரவுபகல் பாராமல் உழைக்கும் காவல்துறை நண்பர்களை ஊக்கப்படுத்தும் வகையில் இன்று பழவந்தாங்கல் காவல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு, அங்கிருந்த காவலர்களுடன் உரையாடினேன். பெண் காவலர்கள் பலரும் பொறுப்புணர்வோடும் அர்ப்பணிப்புடனும் கடமையாற்றுவதைக் கண்டு கூடுதல் மகிழ்ச்சியடைந்தேன்.

காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களை இன்முகத்துடன் வரவேற்று, அவர்களைக் கனிவுடன் நடத்தி உதவிட 912 காவல் நிலைய வரவேற்பாளர்கள் / தகவல் பதிவு உதவியாளர்களுக்குக் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பணி நியமன ஆணைகளை வழங்கியிருந்தேன். அந்த வகையில், வரவேற்பாளர் பகுதிக்குச் சென்று அதன் செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தேன்.

தமிழ்நாடு காவல்துறை எந்நாளும் பொதுமக்களின் நண்பன் எனச் சொல்லும் வகையில் பணியாற்றி அரசுக்கு நற்பெயர் பெற்றுத்தர வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் நங்கநல்லூர்

# மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணப் பொருட்கள்!

### மண்டலக்குழுத் தலைவர் என். சந்திரன் வழங்கினார்!

சென்னை, ஆக.4-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நங்கநல்லூர் மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணப் பொருட்களை மண்டலக் குழுத் தலைவர் என். சந்திரன் வழங்கினார்.

சென்னை ஆலந்தூர் தொகுதி திமுக சார்பாக நங்கநல்லூர், கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள சென்னை மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பாக நோட்டுபுத்தகம், பேனா, பென்சில் போன்ற எழுதுபொருட்களை 12வது மண்டலகுழு தலைவர் என்.சந்திரன் வழங்கினார், அப்போது வட்ட செயலாளர்கள் ஜெ.நடராஜன், இ.உலகநாதன், மு. வெள்ளைசாமி, பி.செல்வம், வெ.பாண்டிசெல்வி, கேபிள்ராஜா, வேல்முருகன், கங்காதரன், மீன்மோகன், ராமு, மணிகண்டன், சுப்பிரமணி, விஜயலட்சுமி, கீதா, வளர்மதி மற்றும் வழக்கறிஞர்கள் கேசவன், சம்பத்குமார், கணேசன், தமிழ்செல்வி, லோகேஷ், மனோகர், கோபி, நாராயணன், ராஜ்குமார், பிரான்ஸ், சதீஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல்லில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஒகேனக்கல் சுற்றுலா தலத்தினை பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தும் விதமாக திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் சுற்றுலாத்துறை இயக்குநர் / தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,பொதுமக்கள் ஏராளமானோர் உள்ளனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக மாணவர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்ப படிவத்தை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்களிடம் மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, முன்னிலையில் மாவட்ட அமைப்பாளர் வே.தியாகராஜர் ஏற்பாட்டில் வழங்கினார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் காயத்ரி ஸ்ரீதரன், எஸ்.ஜெயபாலன், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், மாநகர செயலாளர் சண் பிரகாஷ், ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் பேபிசேகர், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், டி.தேசிங்கு, என்.இ.கே.மூர்த்தி, புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், ஆர். ஜெயசீலன், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த், தி.வை.ரவி, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அக்னி மாசெ.ராஜேஷ் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் பா.புருஷோத்தமன், வி.அபிராமி, அ.விக்டர் மோகன், சந்தோஷ்குமார், மு.சரத்குமார் உள்ளனர்.